**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 94/2020**

**வா.சா. 4 - சுந்தர்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 30.10.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் புத்தேரியில் தாமசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் யாருக்கு வேண்டி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் பிறைசூடும் பெருமாள் பிள்ளைக்காக. பிறைசூடும் பெருமாள் பிள்ளை வழக்கில் வாதியா, பிரதிவாதியா என்றால் தெரியாது. பிறைசூடும் பெருமாள் பிள்ளையின் வீடு எனது வீட்டின் பக்கத்து வீடா என்றால் நான்கு வீடு தள்ளி உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் யார் தயார் செய்தது என்றால் நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார் வழக்கறிஞர் பெயர் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் குறித்து தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. நான் விவசாயி என்று காட்டுவதற்கு ஏதேனும் அடையாள அட்டை அரசிடம் இருந்து கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாதாரணமாக விவசாயிகளுக்கு விவாசாயதுறையில் இருந்து அடையாள அட்டை கொடுப்பார்கள் அது குறித்து தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அடையாள அட்டை வைத்து தான் வரி, மானியம் மற்றும் உரம் வாங்க முடியும் என்றால் சரிதான். நான் பாட்டத்துக்கு வேண்டி விவசாயம் செய்ததாக கூறியுள்ளேன் யாருக்கு வேண்டி என்றால் ராமையாபிள்ளை என்பவருக்காக.

ராமையா பிள்ளைக்கு விவசாய அட்டை உள்ளதா என்றால் உள்ளது. நான் விவசாயம் செய்யும் நிலத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றல் தெரியாது. ராமையா

பிள்ளைக்கு நான் வயல் வாங்கி கொடுத்தேனா என்றால் அவர் தான் வாங்கி கொடுத்தார். சொந்தமாக பயிர்செய்துள்ளேனா என்றால் இல்லை பாட்டத்திற்காக செய்துள்ளேன். ஆகையால் நான் அன்றாட விவசாயத்தில் நான் ஈடுபடவில்லை என்றால் சரிதான். ராமையா பிள்ளை எனக்கு கொடுத்த நிலத்தின் சர்வே எண், பரப்பளவு என்ன என்றால் தெரியாது நான் விலைக்கு வாங்கவில்லை பாட்டத்திற்காக தான் வாங்கியுள்ளேன். பாட்டக்காரர் யார் என்றால் தெரியாது. நான் பாட்டம் கொடுப்பதாக சொல்வது யாருக்கு என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எனக்கு வழக்கு குறித்து எவ்வித விபரமும் தெரியாது நான் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**